கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 2/2023

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 கதிரேசன் என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வாதி என் மீதும், எனது சகோதரர் மீதும் தனிநபர் வழக்கை நீதிதுறை நடுவர் நீதிமன்றம் எண்.2ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் உரிமையியல் வழக்கான இவ்வழக்கின் காரணங்களை சொல்லி தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தனிநபர் வழக்கில் என்ன சமரசம் செய்து முடித்துக்கொண்டோம் என்றால் இனிமேல் பிரச்சனை செய்து கொள்ள மாட்டார்கள் என்று சொல்லி சமரசமாக முடிக்கப்பட்டது. மேற்படி தனிநபர் வழக்கிற்கு ஆதரவாக குளித்தலை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவையும் சேர்த்து தான் தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான்.

2. எனது அண்ணன் காமராஜின் (1ம் பிரதிவாதி ) அலைபேசி எண் என்ன என்றால் 9360586362 ஆகும். 1ம் பிரதிவாதி மேற்கண்ட பிரச்சனை சம்மந்தமாக சர்வேயர் வைத்து அளந்து கொள்கிறேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்னவாறு 1ம் பிரதிவாதி நடந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை அளவீடு செய்து அத்து காணப்பட்டது என்றால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வடபுறம் வாதி சுற்றுசுவர் அமைத்து பாத்துகாத்து கொள்வதில் எனக்கு என்ன ஆட்சேபனை என்றால் எந்த ஆட்சேபனையும் இல்லை. மேற்படி சங்கதிகள் அனைத்தும் கடந்த 2021ம் வருடம் நடைபெற்றது என்றால் சரிதான்.

3. பின்னிட்டு வாதி சுற்றுசுவர் அமைப்பதில் நான் ஆட்சேபனை செய்ததால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தனிநபர் வழக்கானது என் மீதும், எனது சகோதரர்

காமராஜ் மீதும் மட்டுமே வாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது சொத்தின் அத்து எனக்கு தெரியும் என்பதால் நீதிமன்ற ஆணையர் மூலம் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்ய அவசியம் இல்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு நான் தொடர்ந்து இடையூறு செய்ததால் தான் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்ய அவசியம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள படி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**